www.Padasalai.Net

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2022

**12 - STD** **வணிகவியல்** 12414

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 50

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 1 x 15 = 15

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதவும்

1. மாவட்ட மன்றத்தின் தலைவர் யார்?
   அ) மாவட்ட நீதிபதி ஆ) உயர் நீதிமன்ற நீதிபதி
   இ) உச்ச நீதிமன்ற நீதிபதி ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை
2. பொருட்களின் அல்லது சேவைகளின் மதிப்பு மற்றும் இழப்பீடுத் தொகை ஆகியவற்றிற்கு அதிகமாக இருந்தால் மாநில ஆணையத்திடம் புகர் தெரிவிக்கலாம்
   அ) ` 2 இலட்சத்திற்கு மிகையாக ஆனால் ரூ.5 இலட்சத்திற்கு மிகாமல்
   ஆ) ` 20 இலட்சத்திற்கு மிகையாக ஆனால் ரூ.1 கோடிக்கு மிகாமல்
   இ) ` 3 இலட்சத்திற்கு மிகையாக ஆனால் ரூ.5 இலட்சத்திற்கு மிகாமல்
   ஈ) ` 4 இலட்சத்திற்கு மிகையாக ஆனால் ரூ.20 இலட்சத்திற்கு மிகாமல்
3. ஜி.எஸ்.டி. என்பது, ________,________,________.
   அ) சரக்கு மற்றும் சமூக வரி ஆ) சரக்கு மற்றும் சேவைவரி
   இ) சரக்கு மற்றும் விற்பனைவரி ஈ) சரக்கு மற்றும் ஊதியவரி
4. ஒரு நிறுவனத்திற்குள் உள்ள காரணிகள் ________ சூழல் ஆகும்.
   அ) அக சிந்தனையாளர் ஆ) புற நோக்கியான்
   இ) சக மனிதர்கள் ஈ) மேற்கூறிய அனைத்தும்
5. ______ புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும், இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.
   அ) உலகமயமாக்கல் ஆ) தனியார்மயமாக்கல்
   இ) தாராளமயமாக்கல் ஈ) இவற்றில் எதுவுமே இல்லை
6. புதிய பொருளாதாரக் கொள்கை_____ ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
   அ) 1980 ஆ) 1991 இ) 2013 இ) 2015
7. சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு _____.
   அ) 1940 ஆ) 1997 இ) 1930 ஈ) 1960
8. சரக்கு விற்பனைச் சட்டத்தில் எது சரக்கு என்ற பொருளில் உள்ளடங்காதது?
   அ) சரக்கிருப்பு ஆ) வரவேண்டிய பங்காதாயம் இ) பயிர் ஈ) தண்ணீர்
9. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்

| | | |
|---|---|---|
| A இருக்கின்ற சரக்கு | - | 1 ஒப்பந்தம் செய்யும் போது கைவசம் உள்ள சரக்கு |
| B ஒப்பிய சரக்கு | - | 2 ஒப்பந்தம் செய்யும்போது தன்கைவசம் இல்லாத ஆனால் உற்பத்தி செய்தோ, அல்லது பிறரிடமிருந்து பிறகு வாங்கியோதரப்படும் சரக்கு |
| C எதிர்காலசரக்கு | - | 3 விற்பவர் கைவசம் வந்து சேர்வது எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்தது, |
| D வருநிகழ்வுசார்சரக்கு | - | 4 ஒப்பந்தம் செய்யும் போது இனம் கண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட சரக்கு |

   அ) A-1, B-2, C-3, D-4 ஆ) A-1 , B-4, C-2, D-3
   இ) A-2, B-4, C-3, D-1 ஈ) A-3, B-2, C-4, D-1
10. மாற்றுச்சீட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினரகள் எத்தனை பேர்?
    அ) 2 ஆ) 6 இ) 3 ஈ) 4
11. எது கொணர்பவர் பத்திரமாக இருக்கமுடியாது?
    அ) காசோலை ஆ) கடனுறுதிச்சீட்டு இ) மேற்கூறிய ஏதும் அல்ல ஈ) மாற்றுச் சீட்டு



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net

12. தவறான இணையை தேர்ந்தெடுக்க
1 மாற்றுச்சீட்டு - மாற்றுமுறைஆவணச்சட்டம் 1881ல், பிரிவு 5
2 காசோலை ன மாற்றுமுறைஆவணச் சட்டம் 1881ன்பிரிவு 6
3 கடனுறுதிச் சீட்டு - மாற்றுமுறைஆவணச்சட்டம் 1884 பிரிவு 4
4 பொதுக்கீறலிடல் -- 1881ம் ஆண்டு இந்திய மாற்றுமுறைஆவணச்சட்டம் பிரிவு 123

13. கீழ் குறிப்பிடப்பட்டவைகளில் எது உற்பத்திக்காரணி?
அ). நிலம் ஆ) உழைப்பு இ) தொழில்முனைவு ஈ) மேற்கூறிய அனைத்தும்

14. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் எது வணிகப் பணியை சார்ந்தது?
அ) கணக்கியல் பணி ஆ) ஒருங்கிணைப்பு
இ) வாய்ப்பை கண்டறிதல் ஈ) திட்டமிடல்

15. கூற்று : மகளிர் தொழில் முனைவோர் தொழிலில் சிக்கல் அல்லது சவால்கள் எழும்போது அமைதியாக, நிதானமாக, பொறுமையாக முடிவெடுப்பதில்லை.
காரணம்: மகளிராக இருப்பவர்கள் இயற்கையாகவே உணர்ச்சி வயப்படக் கூடியவர்கள்.
அ) கூற்று சரி மற்றும் காரணமும் சரி
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
இ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி
ஈ) கூற்று தவறு காரணமும் தவறு

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 5 = 10**
**22 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்**

16. குறைதீர்ப்பு குறிப்பு வரைக.
17. VUCA -ஐ விரிவாக்கம் தருக.
18. தனியார்மயமாக்கல் என்றால் என்ன ?
19. நிகழ் சரக்கு என்றால் என்ன?
20. மாற்றுமுறை ஆவணம் என்றால் என்ன?
21. தொழில்முனைவோரின் தோற்றுவிப்பு பணிகளை குறிப்பிடுக.(ஏதேனும்2)
22. வாங்குநரோ அல்லது அவரின் முகவரோ பொருளின் உடமையை பெற்றுவிட்டால், விலைபெறா விற்பனையர் பற்றுரிமையை இழக்கிறாரா? எவ்வாறு?

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 3 x 5 = 15**
**29 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

23. தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி?
24. வியாபாரத்தின் உட்புறச்சூழல் காரணிகளை விளக்கு. (ஏதேனும்3)
25. உலகமயமாக்கலின் தாக்கங்களை எழுதுக .(ஏதேனும்3)
26. பொருள் விற்பனை ஒப்பந்தம் உட்கிடை நிபந்தனைகள் மற்றும் நம்புறுதிகளை விவாதிக்க
27. இரண்டு வகை கீறல்களின் வரைபடத்தை வரைக ..
28. தொழில் முனைவோர் மற்றும் மேலாளர் இவர்களை வேறுபடுத்தி காட்டுக. (ஏதேனும் 3)
29. 1. எழுதுபவரும், எழுதப்பெற்றவரும் ஒரே நபராக இருக்கலாம்
2. எழுதுபவரும், பணம் பெறுபவரும் ஒரே நபராக இருக்கலாம்.
மேற்கானும் ஆவணங்கள் எந்த வகையான மாற்றுமுறை ஆவணத்தைச் சார்ந்தவை என குறிப்பிடுக

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

30. தேசிய ஆணையத்தின் ஒட்டுமொத்த பணிகளை விளக்குக? (அல்லது)
தாராளமயமாக்கல் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி விளக்குக. (ஏதேனும் 5)
31. நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக. (அல்லது)
காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக. (ஏதேனும் 5)



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner